DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.159/20

Deposition of Witness: PW 2

| | |
|---|---|
| Name தனலட்சுமி | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.08.2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் தேனியில் குடியிருக்கிறேன். அசா1 என் கொழுந்தனர். சம்பவத்தில் இறந்துபோன ராஜசேனாபதி என் கணவர். அவர் தேனி பெரியகுளம் ரோட்டில் உள்ள அன்னலட்சுமி உணவகத்தில் மேலாளராக பணிபுரிந்து வந்தார். அவர் கடந்த 2.2.20ம் தேதி காலை சுமார் 8.45மணிக்கு வேலைக்கு செல்வதற்காக அவருடைய TVS இருசக்கரவாகனத்தில் கேகேஆர் நகரிலிருந்து புறப்பட்டு தேனியிலிருந்து பெரியகுளம் செல்லும் மெயின் ரோட்டில் ரோட்டை கடப்பதற்காக சாலையின் நடுவில் கட்டப்பட்டுள்ள தடுப்பு சுவரை கடந்து செல்வதற்காக நின்றுக்கொண்டிருந்த போது வடக்கலிருந்து தெற்குநோக்கி வந்த பல்சர் இருசக்கரவாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. இதுசம்மந்தமாக அசா1மும், என் தம்பி வெங்கடேஷ்ம், அன்னலட்சுமி உணவகத்தில் வேலை பார்த்தவரும் எனக்கு தொலைபேசியில் தகவல் சொன்னார்கள். நான் உடனே க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் சென்று பார்த்த போது என் கணவர் இறந்துவிட்டார். சம்பவம் தொடர்பாக அசா1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை